# விவேகானந்த கேந்திரம் - நார்டெப் ,
# கன்னியாகுமரி
# சித்த பாரம்பரிய சிறப்பு வர்மப் பயிற்சி பட்டறை:

வி.கே.நார்டெப்பினுடைய சித்த வர்ம ஆய்வு & வள மையம் சார்பாக உங்கள் அனைவருக்கும் வணக்கங்கள். நமது சித்த வர்ம பயிற்சிப் பட்டறையின் இரண்டாம் ஆண்டு வகுப்புகள் சில வித மாறுதல்களுடன் முழுமையாக பழமை மாற்றமின்றி - பழமை யுத்திகள் மாறுதலின்றி புதுவித உத்யோகத்துடன் ஆறு அடுக்காக ஒரு வருடம் முழுவதும் நடைபெற உள்ளது. இதில்,

1. வர்மம் செயல்படும் முறை, செயல் படுத்தும் முறை, நடைமுறைப் பயிற்சிகள்.
2. வர்ம தொக்கணம்
3. வர்ம களரி, சிலம்பம் சுற்றல்
4. வர்ம மருந்து செய்முறைகள் (15)
5. ஓடிவு முறிவு - நடைமுறைப் பயிற்சி
6. காலிலுள்ள  வர்மங்கள்
7. பல்வேறு முக்கிய நோய்களுக்கான வர்ம புள்ளிகள்.
8. கட்டுரை சமர்ப்பித்தல்

போன்ற பல வர்ம முறைகள் பாரம்பரியத்துடனும், ஆய்வுக்ளுடனும், சித்த மாணவர்கள், சித்த மருத்துவர்கள், வைத்தியர்கள் மற்றும் வர்ம ஆர்வலர்களுக்காக நடைபெற உள்ளது.

சான்றிதழ் - 3 வித நிலைகள்:

1. வர்ம இளநிலை அறிஞர் - 1 + 1 வருடம் ( முதல் நிலை)
2. வர்ம முதுநிலை அறிஞர் - 1+1 வருடம் ( இரண்டாம் நிலை)
3. வர்ம ஆசான் - 1+1 வருடம் ( மூன்றாம் நிலை )

1 வருடம் தொடர் பயிற்சி - வகுப்பறை + செய்முறை.
1 வருடம் - நடைமுறை & ஆய்வுப் பயிற்சி

சித்த பாரம்பரிய வர்ம முறைகள், நுட்பங்கள் மீண்டும் மக்களிடையே விழிப்புணர்வு பெறப்பட வேண்டும் என்ற நோக்கில் நடைபெற உள்ளது. இதில் ஆண், பெண் வர்ம ஆர்வலர்கள், முதல்நிலை வகுப்பை நிறைவு செய்தவர்கள் மற்றும் விவேகானந்த கேந்திரா வர்ம வள மையத்தின் சார்பாக நடைபெற்ற வர்ம பயிற்சி பட்டறையில் கலந்து கொண்டு அனுபவம் பெற்றவர்களும், தொடர் கருத்தரங்கில் கலந்துக் கொண்டவர்களும் கலந்து கொள்ளலாம்.

முக்கிய குறிப்புகள்:

1. மேற்கூறிய மூன்று நிலைகளுக்கு தங்களை ஆவண செய்ய வேண்டுகிறோம்.
2. கல்லூரியில் படித்து பட்டம் பெற்ற மருத்துவர்களும், வர்ம மருத்துவத்தில் ஆர்வம் கொண்டுள்ள வர்ம ஆர்வலர்களும், ஏற்கனவே கேந்திராவில் வர்ம

பயிற்சிப் பட்டறையில் கலந்து கொண்டு இளநிலை அறிஞர் சான்றிதழ் பெற்றவர்களும், இந்த இரண்டாம் நிலை வர்ம வகுப்பிற்கு விண்ணப்பிக்கலாம்.

3. தொடர்ந்து தங்களுக்கு அறிவுறுத்தப்படும் செயல்பாடுகளுக்கு ஏற்பவும், முழுமையாகப் பயின்று, பயிற்சி முடித்த பின்பே சான்றிதழ் வழங்கப்படும்.
4. பாரம்பரிய சித்த வர்மக் கலையைப் பரப்பவே உரிய உயர்நிலை பெறவே என்பதை மனதில் கொள்ள வேண்டும். மேலும் விவரங்களுக்கு அலுவலக தொலைபேசி எண் 04652-246296 , 298294 காலை 11.00 மணி முதல் மாலை 4.00 மணி வரை தொடர்பு கொள்ளலாம். அலுவலக நாட்களில் மேற்குறிப்பிட்ட நேரங்களில் நேரிடையாக விளக்கம் பெறலாம்.
5. வர்ம ஆசான் நிலைக்கு உயர்த்த இடைவிடாத பயிற்சி மற்றும் அறிவுறுத்தப்படும் பணிகளில் தொடர்ந்து ஈடுபாட்டோடு பங்கு பெற வேண்டும்.
6. தொடர்ந்து பயணிக்க வேண்டும். முடிவெடுக்கும் பணிகளை முழுமையாகச் செயல்பட்டு நிறைவேற்றி செய்து முடிக்க வேண்டும். இதுவே அடிப்படை.
7. விவேகானந்த கேந்திராவில் நடைபெறும் வர்ம கலைப் பயிற்சி விவேகானந்த கேந்திராவில் மட்டும் கற்றுத்தரப்படுகிறது. வேறு இடங்களில் இல்லை.
8. பயிற்சிப் பட்டறை குருகுல கல்வி முறையைச் சார்ந்து உரிய முறைப்படி, உரிய நிலைப்படி தங்களை ஈடுபடுத்த வேண்டும்
9. யோகக் கலையைப் போலவே வர்மகலையும் அனைத்து தரத்து மக்களிடமும் சென்றடைய வேண்டும் என்பதே எங்கள் நோக்கம்.

நாள் : மே மாதம் 26 நாள் மற்றும் 27 ஆகிய இரு நாட்கள்.
எளிய உணவு மற்றும் தங்குமிடம் ஏற்பாடு செய்து தரப்படும். ( கேந்திராவின் சார்பாக)

இடம்: தொழில்நுட்ப மையம், ஆஞ்சநேயபுரம், கல்லுவிளை, கன்னியாகுமரி.
கட்டணம்: 2000 ரூபாய். ( இரு நாட்களுக்கு)
பயிற்று மொழி: தமிழ் மற்றும் ஆங்கிலம்.
நேரம்: காலை 10 மணி முதல் மாலை 4 மணி வரை.

| Varmam Workshop (II nd year) | | |
|---|---|---|
| **SL NO** | **MONTH** | **DATE** |
| 1 | **May** | **26-5-2023, 27-5-2023** |
| 2 | **July** | **7-7-2023, 8-7-2023** |
| 3 | **August** | **24-08-2023, 25-08-2023** |
| 4 | **October** | **06-10-2023, 07-10-2023** |
| 5 | **November** | **24-11-2023, 25-11-2023** |
| 6 | **January** | **19-01-2024, 20-01-2024** |

குறிப்பு:

1. இரண்டாம் நிலை வகுப்பிற்கு வருகிறவர்கள் 3 அல்லது 4 வர்மப் புள்ளிகளின் தங்களது அனுபவங்களை கட்டுரை வடிவில் சமர்ப்பிக்க வேண்டும்.
2. பதிவு செய்யப்பட்டவர்கள் மட்டுமே அனுமதிக்கப்படுவர்.
3. ஆண், பெண் இருபாலருக்கும் தனித்தனியாக தங்குவதற்கு எளிய வசதி செய்து தரப்படும். இருநாட்களும் கேந்திராவில் தங்கி இருக்க வேண்டும். (காலை முதல் இரவு வரை தொடர்ந்து வகுப்புகள் இருக்கும் என்பதால்)
4. விவேகானந்த கேந்திராவின் நடைமுறை வழக்கு ரீதிக்கு ஒத்துழைத்து, பாரம்பரியமான நமது வர்ம மருத்துவத்தை ஏனைய பிற பெருமக்களுக்கும் தகவல் தெரிவித்தும், பயனுறச் செய்யவும் வேண்டுகிறோம்.
5. ஆதார் அடையாள அட்டை நகல் கண்டிப்பாக கொண்டு வரவும்.

நம் பாரம்பரிய வர்ம மருத்துவம் வளர வேண்டும். மக்களிடையே, மருத்துவர்களிடையே சேர வேண்டும் என்ற நோக்கில் நடைபெறுவதால் அனைவரும் ஒத்துழைத்து தரும்படி மிக அன்போடுக் கேட்டுக் கொள்கிறோம்.

இறை ஆசியில்,
( இயக்குநர் )

வாழ்க தமிழ்
வளர்க பாரதம்